# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 09.03.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அடியார்களை இறைவனது அருகில் கொண்டு வருவதற்காக உலகில் நபிமார்கள் வருகின்றனர். அடியார்களை அல்லாஹ்வுக்கு இபாதத் செய்பவர்களாக்குவதற்காக வருகின்றனர். அடியார்களை இறைவன் கூறிய வழியில் நடத்திச் செல்வதற்காக வருகின்றனர். இவர்களுள் நமது எஜமானரும், தலைவருமான ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முழுமையான போதனையுடன் வந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமக்கு இறக்கப்பட்ட போதனையை உலகில் பரப்பும் கடமையை நிறைவேற்றினார்கள். அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்தியை உலகில் 1பரப்பும் கடமையை அவர்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றினார்கள் என்றால் அதற்கு ஈடிணை இல்லை.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அரபுநாடுகளில் உள்ள நாடோடிகளுக்கும் கூட உண்மையின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்த்தார்கள். அடிமைகளுக்கும் உண்மையின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்த்தார்கள். அரபு நாட்டின் தலைவர்களுக்கும் எந்தப் பயமுமின்றி தூதுச் செய்தியை கொண்டு சேர்த்தார்கள். பெரும் பெரும் மன்னர்களுக்கும் உண்மையின் தூதுச் செய்தியை கொண்டு சேர்த்தார்கள். இபாதத்தின் கடமையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனமூட்டினார்கள். பிறகு இந்த மகத்தான பணியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது சஹாபாக்கள் செய்தார்கள். பிறகு அன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைத் தாசராகத் திகழ்ந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தோன்றச் செய்தான். அன்னார் மீண்டும் இந்த மகத்தான பணியைப் புதுப்பித்தார்கள். உலகை இறைவன் பக்கம் அழைத்தார்கள். அல்லாஹ்வின் வழியை எவ்வாறு தேட வேண்டும்? என உலகிற்கு கூறினார்கள். எவ்வாறு அவனை அடைய முடியும்? என்று கூறினார்கள்.

அல்லாஹ்வை அடையவும் அவன் வரை சென்றடைய விருப்பமும் இருக்கும் எனில், முழுக்க முழுக்க இஸ்லாம் மட்டுமே இறைவன் வரை கொண்டு சேர்க்கும் மார்க்கமாகும். அவர்கள் மற்ற மார்க்கத்தினருக்கும் இந்த அழைப்பை விடுத்தார்கள். ''வாருங்கள்! இங்கே தான் இறையொளியைப் பெறுவீர்கள்'' என்று ஓர் உருது கவிதையில் கூறினாார்கள்.

**பிறகு ஓரிடத்தில் தமது நூலில் கூறுகின்றார்கள்:**

உலகில் உள்ள மார்க்கங்களை ஆழமாக நோட்டமிட்டால் இஸ்லாத்தைத் தவிர வேறு எல்லா மதங்களும் தம்மிடம் ஏதாவது ஒரு தவறை வைத்திருப்பது தெரிய வரும். இந்த எல்லா மதங்களும் ஆரம்பத்திலிருந்தே பொய்யாக இருந்தன என்பதால் அல்ல.

இக்காலத்தில் பொதுவாக மார்க்கங்களில் தவறுகள் உள்ளன. அதனைப் பற்றி கூறுகிறார்கள். இந்த மதங்கள் எல்லாம் ஆரம்பத்திலிருந்தே பொய்யாகவே இருந்தன என்பதன்று. மாறாக, இஸ்லாம் வந்த பிறகு இறைவன் இந்த மார்க்கங்களுக்கு உதவி செய்வதை நிறுத்தி விட்டான். அது தோட்டக்காரர் இல்லாத தோட்டம் போன்று ஆகி விட்டது. அதற்கு நீர் பாய்ச்சுவதற்கும் சுத்தம் செய்வதற்கும் எந்த ஏற்பாடும் இல்லாமல் போய் விட்டது. எனவே சிறிது சிறிதாக அதில் சீர்கேடுகள் உருவாகின. எல்லா கனி தரும் மரங்களும் காய்ந்து போய் விட்டன. வெறும் முட்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. மார்க்கத்தின் அசல் வேராகிய ஆன்மீகம் முற்றிலும் போய் விட்டது. வெறும் சொற்களைத் தவிர வேறு எதுவும் எஞ்சியிருக்கவில்லை.

**பிறகு அன்னார் கூறுகின்றார்கள்:**

இஸ்லாம் கடைசி ஷரீஅத் ஆக இருப்பதால், இதில் பல்வேறு இடங்களில், பல்வேறு நேரங்களில் அதனை தூய்மையாக வைத்திருப்பதற்காக சீர்திருத்தவாதிகளை அனுப்பினான். எனவே இஸ்லாம் என்ற

தோட்டத்தின் அழகை உருவாக்கவும் அதனை பழம் தரும் தோட்டமாக்குவதற்காகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இந்த உண்மை பேரன்பருடன் இணைவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் இப்போது கடமையாகும். ஏனெனில் இறைவனுடன் உயிருள்ள தொடர்பு இதன் மூலமே இனி உருவாக முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் அழகிய போதனையை இந்தியாவில் மட்டுமல்ல. மற்ற நாடுகளிலும் சென்றடையச் செய்தார்கள். அதுபோன்று அவர்கள் தமது பைஅத் வட்டத்தில் வந்த சஹாபாக்களின் உள்ளத்திலும் இந்த ரூஹ் –ஐ ஊதினார்கள்.

இறைவன் பக்கம் வருமாறு உலகிற்கு தூது விடுங்கள். அவனுடன் தொடர்பை ஏற்படுத்துங்கள். அந்த தொடர்பு இப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைத் தாசருடன் இணைவதன் மூலம் உண்மையான தொடர்பாக இணைய முடியும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தில் வந்தவர்களுள் ஏழை உழைப்பாளிகளும் இருந்தனர். பொறுப்பாளர்கள், விவசாயிகள், கல்வி அறிவற்றவர்கள், கிராமவாசிகள் ஆகியோரும் இருந்தனர். ஊழியர்கள், வணிகர்கள் கூட இருந்தனர். தொழில் செய்வோர் இருந்தனர். நன்கு படித்த மக்களும் இருந்தனர். ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது போதனையைப் புரிந்தார்கள். அன்னாரின் உண்மையிலிருந்து பயன்பெற்றனர்.

இந்த உண்மைப் போதனையை உண்மையான இஸ்லாத்தைப் புரிந்து கொண்டு உலகில் தத்தமது வட்டத்தில் பரப்ப முயலவும் செய்தனர். மற்ற மார்க்கத்தின் மேல் இஸ்லாத்தின் உன்னத சிறப்பை நிரூபித்தனர். பிறகு அவர்கள் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பவர்களுடன் இணைந்தனர். எனவே இம்மக்களே இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை இந்தியாவில் மட்டுமல்ல. வெளியிலும் மிக வேகமாக பரப்ப முயற்சி செய்தனர். இம்மக்களின் சில தப்லீக் சம்பவங்களை இப்போது கூறுவேன்.

ஹஸ்ரத் இமாம் தீன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒருமுறை மவ்லவி ஃபத்ஹே தீன் சாஹிப் எமது பெயரில் ஒரு கடிதம் எழுதினார். தரம்கோட் என்ற இடத்தில் மவ்லவி அப்துஸ் ஸுபுஹான் மானியாவாலா என்பவர் விவாதத்திற்காக வந்திருந்தார். காதியானிலிருந்து ஒரு மவ்லவி அழைத்துக் கொண்டு உடனே வரவும் என்று அதில் குறிப்பிட்டிருந்தது. நாம் மவ்லவியை அப்துல்லாஹ் சாஹிப் கஷ்மீரியை அழைத்துக் கொண்டு தரம்கோட்டைச் சென்றடைந்தோம். அங்கு நிறைய நண்பர்கள் கூடி விட்டனர். மவ்லவி சாஹிப் பெரும் ஜமாஅத்தைக் கண்டு பாகுவாலேவில் சர்தார் பஷந்த் சிங் இடம் சென்று விட்டார். நமது ஜமாஅத் முழுவதும் பாகுவாலே சென்று விட்டது. தப்லீகில் ஆர்வம் இருந்தது என்பதால் அங்கு சென்று சேர்ந்தார்கள். விவாதம் பஷந்த் சிங் உடைய தலைமையில் நடக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஈஸா (அலை) அவர்களது மரணம் மற்றும் உயிர்வாழுதல் குறித்து விவாதம் நடந்தது. ஆனால் எதிர்தரப்பு ஒரு விஷயத்தில் முரண்டு பிடித்தவாறு இருந்தனர். அதாவது தாம் விவாதம் செய்ய வேண்டுமானால் முதலில் மிர்ஸா சாஹிப் உடைய பெயரை திருக்குர்ஆனிலிருந்து காட்ட வேண்டும் என்றனர். அதுவும் மிர்ஸா குலாம் முர்தஸாவின் மகன் மிர்ஸா குலாம் அஹ்மது என்று கூறப்பட்டிருக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தனர். அவ்வாறு இருந்தால் நான் ஏற்றுக் கொள்வோம். அதுவன்றி விவாதம் செய்ய மாட்டோம் என்றார்கள். மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப், திருக்குர்ஆனிலிருந்து காட்டுவோம் என்று கூறினார். விவாதம் நடந்தது. மவ்லவிகள் கோரிக்கைகள் விடுத்தனர். அப்போது மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப், முந்தைய நபிமார்களைப் பற்றி கூறப்பட்டுள்ள முன்னறிவிப்புகளில் அந்த நபிமார்களின் பெயர், தகப்பனார் பெயருடன் சேர்த்து எழுதப்பட்டிருப்பதை முதலில் காட்டுங்கள். பிறகு நாமும் அதே முறையில் காட்டுவோம் என்று கூறினார்கள். முன்னவர்கள் பற்றி அவ்வாறு இருப்பதாக நிரூபிக்கப்படாத நிலையில் நம்மிடம் மட்டும் ஏன் இவ்வாறு நிபந்தனை விதிக்கப்படுகிறது? என்று கூறினார்கள்.

எதிர்தரப்பு இதற்கு அறிவிப்பூர்வமான பதிலைத் தரவில்லை. கடைசியில் வெட்கத்துடன் அமர்ந்தனர். சர்தார் பஷந்த் சிங் கூறினார். அவர் தலைமையில் தான் விவாதம் நடந்தது. இந்த மவ்லவிக்கு ஒன்றும் தெரியவில்லை என்று கூறி பஞ்சாபியில் அவரை ஏசவும் செய்தார். இறுதியில் இறைவன் வெற்றியைத் தந்தான். இந்த விவாதம் பற்றி நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் சொன்னோம்.

அன்னார், மவ்லவி சாஹிப்! திருக்குர்ஆனில் இறைவன் ''எனது பெயரை இஸ்முஹூ அஹ்மத் (அவர் பெயர் அஹ்மதி) என்று கூறியிருக்கிறான்'' என்பதை ஏன் கூறவில்லை? என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் பீர் இஃப்திகார் அஹ்மத் சாஹிப் தமது தந்தை பீர் ரஹ்மத் ஜான் சாஹிப் பற்றி கூறுகிறார். இது பைஅத் செய்வதற்கு முன்பு நடந்த சம்பவமாகும். எனது தந்தையார் ஹஸ்ரத் சாஹிபை இக்காலத்தின் முஜத்தித் என்று ஏற்றுக் கொண்டார். பிறகு தமது நண்பர்கள், தமக்கு தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லாரிடமும் மிகவும் விறுவிறுப்பாக தப்லீக் செய்யத் தொடங்கி விட்டார்கள். ஒரு நீண்ட பிரசுரமும் அச்சிட்டார்கள். அதன் நகல் அல் ஃபஸ்ல் –ல் வெளி வந்தும் உள்ளது என்று இதனை எழுதுபவர் கூறுகிறார்.

அதில் எழுதுகிறார்: எனது தந்தை தப்லீக் சம்பந்தமான வெளியீடுகளுடன், தாமும் தமது முரீதுகளுடனும் பொருள் தியாகத்தில் பங்கெடுத்தார். எவ்வளவு முடியுமோ சந்தா கொடுக்க வேண்டும். வெளியீடுகளையும் செய்ய வேண்டும் என்பதிலேயே அவரது வாழ்வின் கடைசிப் பகுதி கழிந்தது.

இதுவே இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தோற்றத்தின் நோக்கமாகும். அல்லாஹ்வின் அருளால் இன்று புத்தகங்கள் மற்ற படைப்புகளுடன் M.T.A. மூலமாகவும் மார்க்கத்தைப் பரவச் செய்கின்றான். பல்வேறு பகுதிகளுக்கு M.T.A.வுக்காக செயற்கைகோள்கள் தொடங்கியுள்ளன. ஆரம்பத்தில் M.T.A. ஆரம்பித்த போது ஒரே ஒரு செயற்கைகோள் தான் இருந்தது. அதுவும் சில மணி நேரம் M.T.A.ஐ ஒளிபரப்பியது. இன்று அல்லாஹ்வின் அருளால் பத்து செயற்கைகோள்கள் மூலம் உலகில் M.T.A. நிகழ்ச்சிகள் ஒவ்வொரு இடத்திலும் ஒளிபரப்பப்படுகின்றன. இன்னும் சொல்வதாயின், இந்தியாவில் முதலில் பெரும் பெரும் டிஷ்கள் தேவைப்பட்டன. அங்கும் பல்வேறு முயற்சிகள் நடக்கின்றன. இன்ஷா அல்லாஹ் விரைவில் சிறிய டிஷ்கள் – ஒன்றரை, இரண்டு அடி டிஷ்கள் மூலமாக M.T.A. ஒளிபரப்பச் செய்யப்படும். இதற்காக ஒரு செயற்கைகோள் வாங்கப் போகிறார்கள். எவ்வாறிருப்பினும் இப்போது அறிவிப்புகளின் பக்கம் வருகிறேன்.

**ஹஸ்ரத் மாஸ்டர் நாஸிர் ஹுஸைன் சாஹிப், ஹகீம் முஹம்மது ஹுஸைன் சாஹிப் மர்ஹமே ஈஸா அவர்களின் மகன் கூறுகிறார்:**

சிறு வயது முதலே எனக்கு தப்லீகில் பெரும் ஆர்வம் இருந்தது. செப்டம்பர் 1903 வரை எனது தந்தையார் பார்ட்டி தர்வாஸே லாஹூர் பட்ரங்கா முஹல்லா (இதுவும் அங்குள்ள ஓர் ஊரின் பெயர்) வில் வசித்து வந்தார். அக்காலத்தில் எனது தந்தையாரிடம் ஓர் அஹ்மதி மவ்லவி அபூ ஸயீத் அல்அரப் என்பவர் வந்தார். அவர் எனது மார்க்க ஆர்வம், தப்லீக் ஆகியவற்றைக் கண்டு எளிய முறையில் ஈஸா (அலை) மரணம், மஸீஹ் மவ்வூது வருகை குறித்து ஆதாரங்களை எனக்கு கற்பித்தார். நான் எப்போதும் மஸ்ஜிதுகளின் இமாம்களிடம் சென்று இந்த ஆதாரங்களை எடுத்து வைப்பதுண்டு. எடுத்து வைத்து இதற்கு பதில் தாருங்கள் என்பேன். இந்த நாட்களில் ஒருமுறை பார்ட்டி தர்வாஸேயின் உயரமான பள்ளிவாயிலின் இமாமிடம் சென்று ஆதாரங்களை வைத்து பேசினேன். அவர் கூறினார்: நீர் மிர்ஸா சாஹிபுடன் சென்று அவருடன் நடந்து செல்ல வேண்டும். காற்றில் தூசி பறக்கும் போது உடனிருந்து வீட்டிற்குச் சென்றதும் அவரது முகத்தைப் பார்க்க வேண்டும். அதில் மற்றவர்களைப் போன்று தூசி எதுவும் ஒட்டியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்று கூறினார். இந்தச் செயலைச் செய்து விட்டு என்னிடம் வந்து கூறாதவரை நான் உமது வாதத்திற்கு பதில் கூறமாட்டேன் என்றார்.

அதாவது இந்த நிபந்தனையை வைக்கிறார். கூடே செல்ல வேண்டும். காற்றில் மண் பறக்கும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது முகத்தில் மண் படுகிறதா? இல்லையா? என்று பார் என்றார். மேலும் நீர் சுயமே சென்று இதனைப் பார்த்து விட்டு என்னிடம் கூறும். அப்போது உமக்கு நான் பதில் தருவேன். நான் ஏற்றுக் கொள்வேன் என்று கூறவில்லை. பதில் தருவேன் என்று கூறினார். உண்மை நிலை என்னவென்று அப்போது நான் கூறுவேன். ஏனெனில் எனக்கு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுடன் பலமுறை காதியானில் உடன் நடந்து செல்லும் வாய்ப்பு கிடைத்து வந்தது. இதற்குப் பிறகு நான் உடனே எனது தந்தையாருடன் புறப்பட்டு காதியான் வந்து விட்டேன். ஹுஸூர் (அலை) அவர்களுடன் புறப்பட்டு காலையில் நடக்கச் சென்றேன். ஹுஸூர் மிக வேகமாக நடந்து செல்வார்கள். நான் ஹுஸூருடன் சேர்ந்து செல்வதற்காக

பல சமயங்களில் ஓடிக் கொண்டே செல்வேன். தற்செயலாக அன்று காற்றும் வேகமாக வீசியது. மணல் தூசு காற்றில் பறந்து எல்லார் மீதும் பட்டது. ஹுஸுர் நடந்து விட்டு திரும்பிய போது தமது வீட்டின் வட்ட அறைப் பகுதியில் அன்பர்களிடம் விடை கொடுப்பதற்காக சற்று நின்ற போது எல்லா அன்பர்களும் ஹுஸுர் (அலை) அவர்களைச் சுற்றி வட்டமிட்டார்கள். எளியவன் எல்லாரையும் அகற்றிக் கொண்டு உள்ளே நுழைந்து ஹுஸுர் அருகில் போய் நின்றேன். எல்லா அன்பர்களின் முகத்தையும், ஹுஸுர் (அலை) அவர்கள் முகத்தையும் கவனமாகப் பார்த்தேன். அப்போது எனது வியப்புக்கு அளவே இல்லை. ஹுஸுர் (அலை) அவர்களது முகத்தில் தூசியுடைய எந்த அடையாளமும் இல்லை. மற்ற அனைவரது முகத்திலும் தூசு நன்றாக படித்திருந்தது. அதே நாளிலேயே நான் இதனை ஹஸ்ரத் முதல் கலீஃபாவிடம் சொன்னேன். அப்போது அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அவ்வாறிருப்பது ஓர் அடையாளமாகும் என்று கூறினார்கள்.

திரும்பும்போது லாஹுர் வந்து உயரமான பள்ளியின் இமாமைப் பார்த்து இதனைக் குறித்து எடுத்துரைத்தேன. கூடவே இதனை முதல் கலீஃபா அவர்களிடம் இதுபற்றி சொன்னதையும் குறிப்பிட்டேன். அவர்கள் இது மஸீஹின் அடையாளம் என்று கூறினார்கள் என்பதையும் தெரிவித்தேன். அந்த மவ்லவி சட்டென்று கூறினார். நான் நம்பமாட்டேன். உம்மை அந்த நூருத்தீன் நல்ல கற்பித்து உருவாக்கியுள்ளார் என்றார். சுருக்கமாக, அவர் அந்த நற்பேற்றிலிருந்து விலகி விட்டார். ஆனால் நாம் இந்த அடையாளத்தை எமது கண்களால் கண்டோம்.

பிறகு ஷேர் முஹம்மது சாஹிப் கூறுகிறார்கள்: நான் ஒருமுறை கனவு கண்டேன். ஒரு கிணறு பாலால் நிரம்பியுள்ளது. நான் சில நண்பர்களிடம் அக்கிணற்றிலிருந்து வாளியால் பாலை வாரி குடிக்கச் செய்தேன். இதனால் அக்கிணறு வற்றி விட்டது. அப்போது நான் மவ்லவி ஃபதஹ் தீன் சாஹிபிடம் சென்றேன். அவரிடம் இந்தக் கனவைச் சொன்னேன். அவர்கள், நீர் மவ்லவி அப்துல் கரீம் சாஹிபிடம் செல்லுங்கள் அல்லது மவ்லவி நூருத்தீன் சாஹிபிடம் செல்லுங்கள் என்று கூறினார்கள். அதனால் நான் காதியான் வந்தேன். மவ்லவி அப்துல் கரீம் சாஹிபிடம் கனவைச் சொன்னேன். அவர்கள், பால் என்பது அறிவாகும் என்று கூறினார்கள். நான் ஒரு வார்த்தை கூட கற்கவில்லையே என்றேன். அவர்கள் கூறினார்கள்: இங்கு இல்ம் என்பது இறைவன் கற்றுத் தருகிற இல்ம் ஆகும். வாளியில் நிறைத்து நிறைத்து புகட்டுவது என்பதன் பொருள், மஸீஹ் மவ்வூது உடைய வாதம் குறித்து பல நண்பர்கள் உம்மிடமிருந்து பயன்பெறுவர். கிணறு வற்றி விடுவதன் பொருள், உம்மை தப்லீக் செய்வதையும், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களை மஹ்தி என்று கூறுவதையும் தடுப்பவர்கள் ஒரு நாள் உமக்கு முன்னால் மரித்துப் போய் விடுவர். இவ்வாறு இந்த மூன்று விஷயங்களும் நிறைவேறின. கான்ட்பதஹ் பகுதியில் எனக்கு இருந்த எதிர்ப்புக்கிடையில் எனது தப்லீக் இறை உதவி மற்றும் ஹுஸுர் அவர்களது துஆவின் விளைவால் முழு ஊரும் அஹ்மதி ஆகி விட்டது.

**பிறகு மர்தானைச் சேர்ந்த ஹஸ்ரத் காஸி முஹம்மது யூசுஃப் சாஹிப் கூறுகின்றார்கள்:**

அவர்கள் சுற்றுலா வந்த காலத்தில் இந்தியாவில் பம்பாய், கராச்சி, டெல்லி, ஆக்ரா, சிம்லா, கல்கத்தா ஆகிய ஊர்களைக் காணும் வாய்ப்பு கிடைத்தது. புலுசிஸ்தானில், ஷிப்பி, குயோட்டா, மஸ்தோன் ஆகிய ஊர்களைப் பார்த்திருந்தார். ஆப்கானிஸ்தானில் ஜலாலாபாத், காபூல், சாரிக்கார், நமானி ஆகிய ஊர்களையும் பார்த்திருந்தார். பஞ்சாபில், கோமெரி, காதியான், குர்தாஸ்பூர், அம்ரிஷ்தர், ராவல்பிண்டி, சியால்கோட், லாஹுர், வஸிராபாத் ஆகிய ஊர்களையும் பார்த்துள்ளார். ஸர்ஹத் மற்றும் எல்லா மண்டலங்களையும் பார்த்தேன் என்கிறார். ஜம்மு காஷ்மீர் ஆகியவற்றையும் பார்த்துள்ளார். ரோஸேபல்கில் யூஸ் ஆஸப் – ஏசுயூசப் உடைய கபரைப் பார்த்தார். இது கான்யார் முஹல்லாவில் உள்ளது. அவர் கூறுகிறார்: நான் பைஅத் செய்த போது, அதே நாளில் பள்ளிக்கூட மாணவர்கள், பெஷாவர் நகரின் எல்லா மாணவர்கள் ஆகியோரிடம் காதியானி, காதியான், மிர்ஸா காதியானி என்ற பெயரில் பிரபலமடைந்து விட்டேன். அதாவது பைஅத் செய்த நாளிலேயே அதை அவர் பகிரங்கப்படுத்தி விட்டார். எல்லா பள்ளிக்கூடங்களிலும் அது பிரபல்யமாகிவிட்டது. கூறுகிறார்: கால்பந்து மைதானத்திற்கு சென்றால், எல்லா சக விளையாட்டு வீரர்களிடமும் இதே சர்ச்சை நடைபெற்றது. அஹ்மதிய்யத் நன்கு பிரபல்யமடைந்தது. மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கினர். அன்றாடம் வாக்குவாதம், கேள்வி–பதில்களால் நிறைந்தது. பள்ளிக்கூடம் சென்றால் அங்கும் இந்தப் பேச்சு

சிறிது சிறிதாக பரவியது. நான் வேலை பார்க்கும் காலத்தில் பள்ளிக்கூடத்தையும் நகரையும் தாண்டி பெஷாவர் பகுதி வரை மற்றும் லாஹூர் பகுதி வரைக்கும் பரவியது. ஏனெனில் எல்லா மாவட்டங்களிலும் அதிகாரிகள் மாண்புமிகு சர்ஹத் மாநில முதல் அமைச்சருடன் சுற்றுப் பயணம் சென்று வருவேன். இஸ்லாமிய கல்லூரி, மிஷன் கல்லூரி ஆகியவற்றில் சர்ஹத்தீன் எல்லா மாவட்ட பிள்ளைகளும் படித்தனர். அவர்களை போர்டிங்குக்குச் சென்று சந்திப்பேன். அங்கும் தப்லீக் செய்வேன். சர்ஹத் முழுவதும் சொற்பொழிவு மூலமும், எழுத்து மூலமாகவும் தப்லீக் செய்தேன். அதிகமாக நிர்வாகத்தில் இருப்பவர்கள் அஹ்மதியாகிக் கொண்டே இருந்தனர். மக்கள் என் மூலமாக அஹ்மதி ஆனார்கள். பிறகு அவர்கள் மூலமாக மக்கள் அஹ்மதியாயினர்.

அவர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 200-250 பேர் இருக்கும். அவர்களுள் சிலர் இறந்து விட்டனர். சிலர் உயிருடன் உள்ளனர். ஆனால் இரண்டாவது கிலாஃபத்தின் காலத்தில் அவர்களுள் சிலர் பைகாமி (லாஹூரிகள்) களாக ஆகி விட்டனர். சிலர் ஜமாஅத்தில் இருக்கின்றனர் என்று கூறுகிறார்.

**மானா சாஹிபின் மகன் ஹஸ்ரத் அஹ்மத் தீன் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்:**

நான் ஒருமுறை குத்பா ஜுமுஆவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாயிலிருந்து கேட்டேன். எனது ஜமாஅத்தின் கல்வி அறிவில்லாதவர்கூட பிறர் மீது வெற்றி பெறுவார். அவர்கள் நம்மை எதிர்த்து நிற்க முடியாது.

அதாவது அந்நியர்களால் அஹ்மதிகளை எதிர்த்து நிற்க முடியாது என்று கூறினார்கள். இதனை நான் அனுபவத்தில் கண்டுள்ளேன். நான் அறிவில்லாமல் படிப்பற்றவராகவும் இருந்த நிலையிலும் கூட அஹ்மதி அல்லாத உலமாக்களை முற்றிலும் வாயடைக்கச் செய்துள்ளேன். எந்த அளவுக்கு எனில், எதிரி உலமாக்கள், நான் படிக்காதவன் என்பதால் நீர் பொய் சொல்கிறீர் என்று சொல்லி விடுகின்றனர். அதாவது அஹ்மதிகள் பெரிய படிப்பு படிக்கவில்லை என்பதை அந்த உலமாக்கள் நம்ப மறுத்து விடுகின்றனர்.

**மியான் காலே கான் சாஹிபின் மகன் ஹஸ்ரத் டாக்டர் முஹம்மது பக்ஷ் சாஹிப் கூறுகிறார்:**

நான் 1903 -ல் கடிதம் மூலமாக சாவ்னி ஸ்தவர் ஷிம்லா மாவட்டத்திலிருந்து பைஅத் செய்திருந்தேன். 1902 -ல் ஹுஸூரை சந்தித்தேன். அப்போது ஹுஸூர் தாடியில் மருதாணி இட்டவாறு துணி வைத்துக் கட்டியிருந்தார்கள். இடுப்பில் வேஷ்டி அணிந்திருந்தார்கள். ஹுஸூர் அவர்கள் மஸ்ஜித் முபாரக் பக்கத்தில் உள்ள அறையின் வளாகத்தில் கட்டிலில் அமர்ந்திருந்தார்கள். ஹுஸூருடன் 4-5 பேர் இருந்தார்கள். ஒவ்வொருவருடன் ஹுஸூர் கை குலுக்கினார்கள். ஒவ்வொருவரின் நிலைமைகளையும் விசாரித்தார்கள். என்னிடம் எங்கிருந்து வந்துள்ளீர்கள் என்று கேட்டார்கள். முதர்கினாவாலி கபூர்தலா மாகாணத்திலிருந்து வந்துள்ளேன். விடுப்பில் வந்துள்ளேன். நான் பீரங்கி ஆலையில் பணி செய்கிறேன். அங்கு நான் தனி அஹ்மதி ஆவேன். இராணுவத்தில் தப்லீக் செய்வது மிகவும் சிரமமாகும். ஆர்வம் இருக்கிறது. ஆனால் அங்குள்ள அதிகாரிகள் தப்லீக் செய்ய விடுவதில்லை என்றேன்.

ஹுஸூர் கூறினார்கள்: நீங்கள் தனியாக இருக்கமாட்டீர்கள். உறுதியுடன் அஹ்மதிய்யத்தை தப்லீக் செய்யுங்கள். நீங்கள் பதற வேண்டாம். பிறகு ஒரே இடத்தில் தான் இராணுவச் சாவடியில் இருப்பீர்களா என்று ஹுஸூர் கேட்டார்கள். ஒவ்வொரு மூன்று வருடத்திற்கு ஒருமுறை சாவடி மாறும் என்றேன். எங்கு சென்றாலும் அங்குள்ள ஜமாஅத்துடன் கலந்து இருங்கள். மிகவும் அடிப்படையான மிக முக்கிய விஷயத்தை ஹுஸூர் கூறினார்கள்.

எங்கிருந்தாலும் ஓர் அஹ்மதி ஜமாஅத்துடன் தொடர்பு வைத்திருக்க வேண்டும்.

**காலோ கான் சாஹிபின் மகன் ஹஸ்ரத் மாமுகான் சாஹிப் கூறுகிறார்:**

1902 -ல் நான் ஒரு கனவு கண்டேன். சந்திரன் உடைந்து விண்ணிலிருந்து எனது மடியில் விழுந்து விட்டது. நான் இந்தக் கனவைப் பற்றி மர்ஹூம் செய்யது முஹம்மது ஷா சாஹிபிடம் கேட்டேன். இவர் மாச்சிவாடாவைச் சேர்ந்தவர். தூய அஹ்மதியாக இருந்தார். உமக்கு கண்ணியம் கிடைக்கும் அல்லது ஏதாவது ஒரு பெரியவரிடம் பைஅத் செய்வீர் என்று கூறினார்.

எனது வயது அப்போது 24 தான் ஆகியிருந்தது. நான், செய்யது முஹம்மது ஷா சாஹிப் இருவருமே மாச்சிவடா பள்ளிக்கூடத்தில் பணிபுரிந்து வந்தோம். அவர்கள் என்னிடம் தப்லீக் செய்தார்கள். அந்நாட்களில் பண்டித லேக்ராம் உடைய முன்னறிவிப்பு பிரபல்யமாக இருந்தது. நான் ஷா சாஹிபிடம் கூறினேன். பண்டித லேக்ராம் உடைய விஷயத்தில் முன்னறிவிப்பு நிறைவேறி விட்டால் நான் பைஅத் செய்வேன். இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது. நானும் உடனே பைஅத் செய்து விட்டேன். அப்போது மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் உயிருடன் இருந்தார்கள். சையத் முஹம்மது ஷா சாஹிப் அவர்களிடம் நான் எனது பைஅத் கடிதத்தை எழுதச் சொன்னேன். ஹுஸுரிடம் கடிதம் சேர்ந்தது. ஹுஸுர் (அலை) அவர்களுடைய பதிலாக மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் கடிதம் எழுதினார்கள். எனது பைஅத் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக எனக்கு கடிதம் வந்தது. தங்களுக்காக ஹஸ்ரத் சாஹிப் துஆ செய்தார்கள் என்று எழுதியிருந்தார்கள். 1904 -ல் கடிதம் மூலமாகவும் 1906 -ல் நேரடியாகவும் காதியான் வந்து பைஅத் செய்தேன்.

**மியான் அப்துர் ரஷீத் சாஹிப் எழுதுகிறார்கள்:**

லாஹுரில் ஒரு அஹ்மதியல்லாத நபர் ஒருவரின் மகன் இரயில்வேயில் பணியாற்றினான். அவனிடம் ஆரிய சிந்தனை ஏற்பட்டு விட்டது. அவனது பெற்றோர்கள் அதனால் பெரிதும் வருத்தமடைந்தனர். அவர்கள் அவனை பேகம் ஸாயி பகுதியில் உள்ள பள்ளிவாயிலில் உள்ள மவ்லவியிடம் அழைத்துச் சென்றனர். மவ்லவியின் முன் ஆரியர்கள் இஸ்லாத்தின் மீது வைக்கிற சில ஆட்சேபனைகளை அவன் வைத்தான். அவர் மிகவும் கோபம் கொண்டார். அவர் அவனை அடிக்க ஓடினார். ஆரியர்களின் ஆட்சேபனையை சொன்ன போது மவ்லவியிடம் எந்த பதிலும் இல்லை. மவ்லவி கோபம் கொண்டு அவனை அடிக்க ஓடினார். அந்த இளைஞன் தனது தலைப்பாகையை அங்கேயே விட்டு விட்டு ஓடினான். மக்கள் பின்னால் ஓடினர். மக்களின் இந்நிலையைக் கண்டு ஓர் அஹ்மதியான அஹ்மத் தீன் சாஹிப் அவன் பின்னாலேயே அவனது வீடு வரை சென்றார். அசல் சம்பவத்தை புரிந்து கொண்டு அவர் என்னிடம் வந்தார். அதாவது மியான் அப்துர் ரஷீத் சாஹிபிடம் அந்த அஹ்மதி வந்தார். என்னிடம் அவனது நிலைகளைப் பற்றி கவனமூட்டினார். அவனைக் கண்டிப்பாக சந்திக்க வேண்டும் என்றேன். ஒரு முஸ்லிம் ஏன் ஆரிய சிந்தனை பெற்றான் என்ற வேதனை எனக்கு இருந்தது. அஹ்மதியிடம் மட்டுமே இந்த வேதனை இருந்தது. மவ்லவி வெறுமனே அடிக்கவே ஓடினார்.

இவ்வாறு நான் இவர்களுடன் அவனது வீட்டிற்குச் சென்றேன். முதலில் அவன் பேச மறுத்தான். நான் ஆரியன் ஆகி விட்டேன். என் மீது உங்கள் பேச்சுகளால் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது என்று மிகத் தெளிவாகக் கூறிவிட்டான். அவன் மாமிசம் உண்பதை விலக்கி ஆரியர்களின் நடைமுறைக்குப் பழகி விட்டான். அவர்களின் சபைக்கு சென்று வந்தான். அவர்களின் வழிபாடுகளில் கலந்து கொண்டான்.

நான் மீண்டும் மீண்டும் சென்று வலியுறுத்தியதில் ஓரளவு என்னுடன் பழகி விட்டான். நடக்கச் செல்லும் போது அவனுடன் சேர்ந்து கொள்வேன். சில வேளையில் அவனுக்காக காத்திருந்து அவன் நடக்க வரும் போது அவனுடன் சேர்ந்து நடப்பேன்.

சில நாட்களுக்குப் பிறகு ஈஸ்டர் விடுமுறை வந்தது. நான் என்னுடன் காதியான் வா என்று கூறினேன். அவன் முதலில் அதற்கு தயாராக இல்லை. நான் மவ்லவிகளிடம் செல்லத் தயாராக இல்லை என்று கூறினான். உடனே அவனுக்கு நான் மிகவும் புரிய வைத்தேன். காதியானில் உனக்கு எந்த தொந்தரவும் ஏற்படாது என்று புரிய வைத்தேன். உம்மிடம் தீய முறையில் நடந்து கொள்ளப்படாது என்று விளக்கினேன். எந்த ஆட்சேபனையையும் எடுத்து வைக்கலாம். நான் எல்லா வகையிலும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று நான் வலியுறுத்தியதில் அவன் காதியான் வருவதற்கு தயாராகி விட்டான். காதியான் சென்றோம். அங்கு சென்று மவ்லவி நூருத்தீன் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை சந்தித்தோம். அவர்கள் பரிவுடன் நடந்து கொண்டார்கள். அவர்கள் அந்தப் பையனிடம், நீங்கள் என்ன ஆட்சேபனை செய்ய வேண்டுமோ செய்யுங்கள். பதில் தரப்படும் என்று கூறினார்கள்.

நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம், ஹுஸூர் இவன் மாமிசம் உண்பதையும் விட்டு விட்டான். இந்து முறைப்படி வாழ்க்கை வாழத் தொடங்கி விட்டான் என்று கூறினேன். மவ்லவி சாஹிப் அவர்கள் அவனுக்காக சில ரொட்டிகளும், பருப்பும் அனுப்பி வைத்தார்கள். அதில் அவன் மிகவும் கவரப்பட்டான். எனது உணவு பற்றியும் கவனத்தில் கொள்ளப்படுகிறது என்று உணர்ந்தான்.

அன்று ளுஹர் தொழுகைக்காக நான் சென்ற போது அவனையும் உடன் அழைத்துச் சென்றேன். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் மஸ்ஜித் முபாரக்கில் அமர்ந்திருந்தார்கள். அந்த நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆரியர்களைப் பற்றி நூல் எழுதிக் கொண்டிருந்தார்கள். அதனால் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் ஆரியர்கள் வைக்கின்ற சில ஆட்சேபனைகளை எடுத்து வைத்து அதற்கான பதிலையும் வழங்கினார்கள். இது அந்தப் பையனை மிகவும் கவர்ந்தது. அதற்குப் பிறகு பல ஆட்சேபனைகள் தன்னாலேயே அவனை விட்டு அகன்றன. இஸ்லாத்தின் மீது ஒருவகையான ஆர்வம் உருவானது.

அஸர் தொழுகைக்குப் பிறகு அவனை நான் ஹஸ்ரத் மவ்லவி சாஹிபுடைய திருக்குர்ஆன் தர்ஸ் நடக்கும் பகுதிக்கு அழைத்துச் சென்றேன். மவ்லவி நூருத்தீன் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலும் கூட திருக்குர்ஆன் தர்ஸ் வழங்கி வந்தார்கள். அவர் கூறுகிறார்: அந்த இடத்திற்கு அப்பையனை அழைத்துச் சென்றேன். அது மஸ்ஜித் அக்ஸாவில் நடந்தது. அதன் பிறகு நாங்கள் இருவரும் மவ்லவி சாஹிப் உடைய சமூகத்தில் சென்றோம்.

ஹுஸூர் இவனுக்கு சற்று புரிய வையுங்கள் என்று நான் கூறினேன். அதற்கு மவ்லவி சாஹிப், இவருக்கு என்ன ஆட்சேபனை உள்ளது என்பதை சற்று கூறுங்கள் என்றார்கள். அவன் மாமிசம் உண்பதைக் குறித்த ஆட்சேபனையை எடுத்து வைத்தான். அதற்கு மவ்லவி சாஹிப் மிக அழகிய முறையில் பதிலளித்தார்கள். அவனுக்கு திருப்தி ஏற்பட்டது. மக்ரிப் தொழுகைக்குப் பின் நாங்கள் மீண்டும் மஸ்ஜித் முபாரக்கில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முன்பு வந்தோம். ஹுஸூர் (அலை) அவர்கள் ஆசனத்தில் அமர்ந்தவாறு பேசிக் கொண்டிருந்தார்கள். மக்கள் பொதுவாக அப்துல் கரீம் சாஹிப் மூலமாக கேள்வி பதில் பெற்று வந்தனர். அதனை அந்த சிறுவன் கேட்டு வந்தான். அவன் அதற்குப் பிறகு எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை.

மறுநாள் ளுஹர் வேளையில் அந்தப் பையன் உளூ செய்தான். ளுஹர் தொழுதான். அந்த நாளிலும் மவ்லவி சாஹிப் உடைய தர்ஸை கேட்டான். மூன்றாம் நள் அவன் ஹுஸூர் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தான். அதன் பிறகு அவனிடம் இஸ்லாத்தின் மீது பேரன்பு பிறந்தது. கூறுகிறார்: அதற்குப் பிறகு அவன் ஆரியர்களின் சபைக்குச் சென்று இஸ்லாத்தின் பெருமையை எடுத்துரைக்கின்றான். அவர்களின் ஆட்சேபனைகளுக்கு பதில் தருகிறான். அம்மக்களிடம் இந்த அளவுக்கு வேதனை இருந்தது. ஒருவரைக் கூட அவர் முஸ்லிமாக இருக்கும் போது வீணாகிப் போக விடுவதில்லை.

**பிறகு முகல் சாஹிப் என்று பிரபல்யமான மியான் அப்துல் அஸீஸ் சாஹிப் கூறுகிறார்:**

நீலே குடும்பத்தில் ஒரு பட்டான் மவ்லவி இருந்தார். இதில் பட்டான் மவ்லவிகளின் நிலைமையை விளக்குகிறார். அவருக்கு தப்லீக் செய்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உண்மையாளர் என்று ஏற்றுக் கொண்டார். ஆனால் அவர், நீர் என்னிடம் தப்லீக் செய்வதில் பிரயோசனம் இல்லை. எமது சமுதாயத்தில் ஒரு வழக்கம் உள்ளது. நாங்கள் ஒருமுறை மறுத்து விட்டால் பிறகு ஆண்டவனே வந்து சொன்னாலும் கேட்க மாட்டோம் என்று கூறினார். அந்த மவ்லவி தற்கொலை செய்து இறந்து விட்டதாக பிறகு கூறப்படுகிறது.

இன்னொரு சம்பவமும் இவர் அறிவிக்கிறார். அவரும் பட்டான் மவ்லவி தான். அவரும் ஒருவர் மீது காதல் கொண்டு, விஷத்தை தின்று தற்கொலை செய்து கொண்டார் என்று கூறப்படுகிறது.

லுஹாரி மண்டியில் ஒரு கடை இருந்தது. அங்கு நாங்கள் கடந்து செல்லும் போது, அந்த மவ்லவி, இதோ காஃபிர்கள் போகின்றனர் என்று கூறுவார். ஒருமுறை நான் கூறினேன். நீரும் ஆய்வு செய்யும்.

போகும்போதெல்லாம் எம்மை காஃபிர் என்கிறீர். அவர் கூறினார். இறைவனே வந்து சொன்னாலும் நான் ஏற்கமாட்டேன் என்று இவரும் அதே பதிலைக் கூறினார்.

**ஹஸ்ரத் முன்ஷி காஸி மஹ்பூப் ஆலம் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் மியான் மூஸா சாஹிபிற்கு தப்லீக் செய்யத் தொடங்கினேன். அவரை காதியானுக்கு அனுப்பி வைத்தேன். ஆனால் அவர் காதியானில் துரதிஷ்டத்துடன் பைஅத் செய்யாமல் வந்து விட்டார். பிறகு அவ்வப்போது பத்ர் பத்திரிகை படித்துக் காட்டுவேன். பிறகு அவருக்கு ஒரு ஹதீஸ் சொல்லிக் காட்டினேன். ஒரு காட்டரபி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து சொன்னார். நீங்கள் அல்லாஹ்வின் ரஸூல் என்று இறைவன் மீது ஆணையிட்டுக் கூற முடியுமா? என்றார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நான் இறைவனது தூதராவேன் என்று ஆணையிட்டுக் கூறினார்கள். உடனே அந்தக் காட்டரபி பைஅத் செய்து விட்டார். அவர் தனது கோத்திரத்தாரையும் பைஅத் செய்வதற்காக அழைத்து வந்தார். இந்த சம்பவத்தை நான் ஹஸ்ரத் மியான் மூஸா சாஹிபிற்கு கூறியதும் அவரது உள்ளத்திலும் அதற்கு சிறந்த தாக்கம் ஏற்பட்டது. அப்போதே அவர் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு கடிதம் எழுதினார். அக்காலத்தில் கடிதம் எழுதுவதற்கு கார்டு பயன்படுத்தப்பட்டது. அதில், தாங்கள் மஸீஹ் மவ்வூது என்று இறைவன் மீது சத்தியமிட்டுக் கூற முடியுமா? என்று கேட்டிருந்தார். இந்தக் கார்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அடைந்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மவ்லவி அப்துல் கரீம் சாஹிபிற்கு கட்டளை இட்டார்கள். நான் இறைவன் மீது சத்தியமிட்டுக் கூறுகிறேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த உம்மத்திற்கு வாக்களித்த அதே மஸீஹ் மவ்வூது ஆக இருக்கிறேன் என்று எழுதுங்கள் என்று கூறினார்கள். இந்தக் கார்டில் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் தம் சார்பாக இந்த வரிகளை எழுதினார்கள். நீங்கள் இறைவனது மஸீஹின் சத்தியத்தைப் பெற்றுள்ளீர்கள். நீங்கள் ஈமான் கொள்ளுங்கள் அல்லது இறைவனது தண்டனையை எதிர்பார்த்திருங்கள் என்று எழுதினார்கள். இந்த கார்டு வந்து சேர்ந்ததும் மியான் முஹம்மது மூஸா சாஹிப் தமது குடும்பத்துடன் பைஅத் செய்வதாக கடிதம் எழுதினார். நான் தனியாக இருந்தேன். இறைவன் என்னுடன் அவர்களையும் என்னுடன் சேர்த்து விட்டான் என்று கூறுகிறார்.

**பிறகு முன்ஷி காஸி மஹ்பூப் ஆலம் சாஹிப் எழுதுகிறார்.**

லாஹூரில் ஒரு வக்கில் இருந்தார். அவரது பெயர் கரீம் பக்ஷ். அவர் பக்ரா என்று அழைக்கப்பட்டார். இது என்ன பெயர் என்று தெரியவில்லை. இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அதிகமாக ஏசி வந்தார். தப்லீக் நடந்த போது ஒருநாள் கூறினார். மஸீஹ் இறந்து விட்டார் என்று யார் கூறுகிறார்? அப்போது நான், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று நிரூபித்துக் காட்டுகிறேன் என்று கூறினேன். உடனே அவர் வேகமாக என்னை அறைந்தார். நான் மயங்கி கீழே விழுந்து விட்டேன். நான் அங்கிருந்து சென்ற பிறகு இரவில் ஒரு கனவு கண்டேன். கரீம் பக்ஷ் பக்ரா ஒரு உடைந்த கட்டிலில் இருக்கிறார். அவரது கட்டிலின் கீழ் ஒரு பள்ளம் இருக்கிறது. அதில் விழுந்து கொண்டே இருக்கிறார். எந்த ஆதரவும் இல்லாமல் விழுகிறார். காலையில் எழுந்து அவரிடம் சென்றேன். நீர் இழிவடைவீர் என்று எனக்கு கனவில் காட்டப்பட்டுள்ளது. இவ்வகையில் சிறிது காலத்திற்குப் பிறகு இவரது திருமணமாகாத மகள் முறை தவறி கர்ப்பம் அடைகிறாள். இதனால் இவர் பெரும் இழிவடைந்தார். கருக்கலைப்பு செய்ததில் மகளும் இறந்து போனார். காவல்துறையினருக்கு தெரிந்ததும் விசாரனை நடந்தது. அதிகமான பணம் செலவானது. கௌரவும் அழிந்தது. வெட்கத்தால் வீட்டை விட்டு வெளியே வராமல் இருந்தார். ஒருநாள் அவரைக் கண்டு கூறினேன். நீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏசி வந்தீர். இப்போது அதன் பயனை சுவைத்து விட்டீர். அதற்கு அவர் எந்தப் பதிலும் தரவில்லை.

ஆனால் இன்று உள்ள நிலையாவது பாகிஸ்தானில் ஏதாவது ஒரு மவ்லவியிடம் சரியான முறையில் கூறினாலும் உடனே சட்டத்தின் துணையுடன் நடவடிக்கை எடுத்து விடுவார். சென்ற முறை இது பற்றி நான் கூறினேன். அவர் தனது கண்ணியத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது கண்ணியத்துடன் சம்பந்தப்படுத்தி அவமதிப்பு செய்து விட்டதாக குற்றம் சுமத்தி விடுகின்றனர்.

ஹஸ்ரத் முன்ஷி காஸி மஹ்பூப் ஆலம் சாஹிப் கூறுகிறார். எனது நிகாஹ் ஹஸ்ரத் சாஹிபின் துஆ பரக்கத்துடன் நிகழ்ந்தது. நான் எனது மாமியாருக்கு தப்லீக் செய்தேன். தப்லீகினால் அவர் கவரப்பட்டார். எனினும் பைஅத் செய்யவில்லை. ஒருநாள் அவர் தனது நகையைக் கழற்றித் தந்தார். இதனை ஹஸ்ரத் சாஹிபிடம் கொடுத்து விடுங்கள் என்றார். இதற்கான நற்கூலி எனக்கு கியாமத்தில் கிடைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டதாகக் கூறச் சொன்னார். நான் அந்த நகையை எடுத்துக் கொண்டு காதியான் சென்றேன். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களது சமூகத்தில் எடுத்து வைத்தேன். இதை எனது மாமியார் தந்தார்கள். இதன் பயன் தமக்கு கியாமத்தில் கிடைக்க வேண்டும் என்று கூறினார்கள் என்று சொன்னேன். ஹுஸூர் அதனை ஏற்றுக் கொண்டார்கள். தமது அருளுக்குரிய நாவால், இன்ஷா அல்லாஹ் இதற்கான பலன் அவருக்கு கிடைக்கும் என்று கூறினார்கள். ஒரு காலத்திற்குப் பிறகு எனது மாமியார் மரணித்து விட்டார். நான் அவருக்கு ஜனாஸா தொழவில்லை. ஏனெனில் அவர் முறைப்படி பைஅத் செய்யவில்லை. நான் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களது சமூகத்தில் சென்ற போது (1906ன் சம்பவம் என்கிறார்.) எனது மாமியார் இறந்து விட்டார்கள். ஆனால் நான் ஜனாஸா தொழவில்லை என்று ஹஸ்ரத் சாஹிபிடம் கூறிய போது ஹுஸூர் கூறினார்கள். அவருக்கு ஜனாஸா தொழுதிருக்க வேண்டும். ஏனெனில் அவர் தனது அமல் மூலம், தான் அஹ்மதி என்று நிரூபித்துக் காட்டியுள்ளார். சுற்றுப்புற சூழ்நிலையால் அல்லது அறியாமையால் பைஅத் செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவரது அமல் அவர் ஓர் அஹ்மதி என நிரூபிக்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கமாகிய இஸ்லாத்தைப் பரப்புதல், இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துதல் ஆகியவை அவருக்கு பிரியத்திற்கு உரியவையாக இருந்திருக்கின்றன. எனவே தான் அவர் தமது நகையை வழங்கியிருக்கிறார். நகை பெண்களுக்கு மிகவும் பிரியமானதாக அக்காலத்தில் இருந்தது. இக்காலத்திலும் தான் அவ்வாறிருக்கிறது. அதனை இஸ்லாத்தைப் பரப்புவதற்காக தந்து விட்டார். கியாமத் பற்றிய பயம் இருந்திருக்கின்றது. இறைவனது திருப்தியைப் பெற வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் இருந்திருக்கின்றது. ஆனால் இன்னொன்றும் தெளிவாகி அதன் பொருள் விளங்க வேண்டும். ஒருவர் நம்மை தவறாக நினைக்கவில்லை; அஹ்மதிய்யத்தை தவறாக நினைக்கவில்லை எனில் அவரை அஹ்மதியாக கருத வேண்டும் என்பதன்று. இதனை இந்த சந்தர்ப்பத்தில் கூறுகிறேன்.

இந்தப் பெண் தனது அன்பிற்குரிய பொருளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் எடுத்து வைத்து விட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த நோக்கத்திற்காக வந்தார்களோ அதற்காக எடுத்து வைத்து விட்டார். உள்ளத்தில் அஹ்மதிய்யத்தைப் பற்றி தவறாக நினைக்காமல் இருத்தல், உள்ளத்தில் அஹ்மதிய்யத்தை நல்லது என்று நினைப்பது போதுமானதல்ல.

ஏனெனில் ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறும் கூறினார்கள்: ஒருவர் தவறாக நினைக்கவில்லை எனில், பிறகு அதனை அறிவியுங்கள். ஏன் அதனை வெளிப்படுத்துவதில்லை? ஏதாவது ஒரு காரணத்தினால் நிர்பந்தம் இல்லையெனில் பைஅத் செய்யவும் வேண்டும். நாங்கள் தவறாக நினைக்கவில்லை என்று கூறுவது போதுமானதன்று. நிலைமைகளுக்கேற்பவே ஒவ்வொரு முடிவும் எடுக்கப்படும்.

ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் சாஹிப் ராஜேகி கூறுகிறார்கள். நான் பைஅத் செய்தேன். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களது நூல்களைப் படித்தேன். ஓர் உத்வேகம் பிறந்தது. தப்லீகை ஆரம்பித்தேன். அந்நாட்களில் எனது தப்லீக் நடைமுறை எவ்வாறிருந்தது எனில் 4, 5 பேர் ஒன்றாக அமர்ந்திருப்பதைக் கண்டால் அங்கே சென்று அஸ்ஸலாமு அலைக்கும் கூறி வாழ்த்துக்கள் என்று கூறுவேன். மக்கள் என்னைக் கவனித்தவாறு என்ன விஷயம் என்று கேட்பர். இமாம் மஹ்தி வந்து விட்டார் என்று நான் கூறுவேன். உடனே சிலர் சிரிப்பர். சிலர் விபரம் கேட்பர். ஏதாவது ஒரு வகையில் பேச்சு ஆரம்பமாகும். அதனை வைத்து தப்லீக் செய்யும் சந்தர்ப்பத்தை உருவாக்குவேன். தப்லீக் செய்யும் வாய்ப்பை உருவாக்குவதற்கு இப்போது ஜமாஅத் உலகின் முன் பல பிரசுரங்களை வைக்கின்றது. அதிலிருந்து மக்கள் கேள்வி கேட்டு பதிலைப் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. நாம் ஒரு பேப்பரை கொடுத்து விட்டோம். இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமைதியின் தூதுச் செய்தி என்று கூறி விட்டோம் என்றால் போதாது. இதனால் நமது கடமை நிறைவேறி விட்டது என்பதன்று.

மாறாக இந்த தொடர்பை மேற்கொண்டும் அதிகப்படுத்த வேண்டும். எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்ய வேண்டும்.

தற்போது மஸ்ஜிதுகளின் தொடக்க விழா நடக்கிறது. மூன்று மஸ்ஜிதுகளின் தொடுக்க விழா நிறைவடைந்து விட்டது. அல்லாஹ்வின் அருளால் இன்னும் மூன்று மஸ்ஜிதுகள் வரக்கூடிய ஒரு மாதத்தில் திறக்கபட உள்ளன. இங்கு U.K. வில் திறக்கப்பட உள்ளது. U.K. ல் இப்போது பள்ளிகளின் பக்கம் கவனம் திரும்பியுள்ளது. இதன் மூலமும் தப்லீகின் வழி திறக்க வேண்டும். தொடர்பு ஏற்பட வேண்டும். உள்ளூர் ஜமாஅத்துகள் அதிகமதிகம் அதற்கு முயற்சி செய்ய வேண்டும். பள்ளிகளால் எதிர்ப்பு உருவாகும் இடத்தில் நம் பக்கம் கவனமும் திரும்புகிறது. திறக்கப்பட்ட அந்த பள்ளிகளின் அறிக்கை இதுவாகும். அல்லாஹ்வின் அருளால் முன்னால் தொடர்பில்லாதவர்கள் கூட இப்போது ஜமாஅத்தைப் பற்றி தெரிந்து கொள்கின்றனர். தெரிந்து கொள்ள வரும் போது நாம் அதிலிருந்து முழுமையாகப் பயனடைய வேண்டும்.

**பிறகு மவ்லானா குலாம் ரஸூல் சாஹிப் ராஜேகி கூறுகிறார்:**

மியான் குலாம் முஹம்மது சாஹிப் அந்த சமூகத்தின் பராமரிப்பாளராக இருந்தார். குஜராத் மாவட்டத்திலுள்ள முஅஸ்ஸா சாதுல்லாபூர் தாசிர் பகுதியில் வசிப்பவர். எனது மூலமாகவே அஹ்மதிய்யத்தில் நுழைந்தார். அவரது குடும்பத்தாரும் அவ்வாறே இணைந்தனர். அது மட்டுமின்றி முஅஸ்ஸா சாதுல்லாபூர் உடைய பள்ளியின் இமாம் மவ்லவி கவுஸ் முஹம்மத் சாஹிப். இவர் அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சேர்ந்தவராக இருந்தார். அவரும் அல்லாஹ்வின் அருளால் எனது தப்லீக் மூலமாக அஹ்மதியானார்.

மவ்லவிகளிலும் நல்லியல்பு கொண்டோர் உள்ளனர். மார்க்கத்தைப் புரிந்து கொள்கின்றனர். இக்காலத்திலும் சிலர் உள்ளனர். பாகிஸ்தானிலும் உள்ளனர். மற்ற நாடுகளிலும் உள்ளனர். மார்க்க விஷயத்தில் கடுமையாக இருந்த போதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி ஆங்காங்கே கேட்ட விஷயங்களை வைத்துக் கொண்டு எதிர்த்துக் கொண்டிருக்கிற வேளையிலும் உண்மையைப் பற்றி தெரிய வரும் போது, படிக்கும் போது புரிந்து கொள்கின்றனர். பைஅத்தில் இணைகின்றனர்.

**ஹஸ்ரத் மியான் முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் கூறுகின்றார்:**

எமது குடும்பத்தின் முதல் ஹாஜி ஃபஸ்ல்தீன் சாஹிப். 1892 –ல் காதியான் சென்று பைஅத் செய்தார். ஹாஜி சாஹிப் எனது சச்சாவின் மகன் என்ற முறையில் சகோதரன் ஆவார். அவர் எனது தந்தையார் மற்ற எனது சகோதரர்கள் ஆகியோருக்கு 1903 வரை தப்லீக் செய்தார். எனது தந்தையார் ஓர் இரவு கனவு கண்டார். காதியானின் பக்கத்திலிருந்து முழு நிலவு ஒளி வீசுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உண்மைக்கு ஆதரவு தெரிவிக்கும் விளக்கம் ஒன்றை எனது தந்தை அந்தக் கனவுக்கு தந்தார். அதே நாளில் கடிதம் மூலமாக எல்லாரும் பைஅத் செய்தோம்.

**ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது அப்துல்லாஹ் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

அக்காலத்தில் பைஅத்திற்கு முன்னரே சிலர் தப்லீக் செய்தனர். பைஅத்திற்குப் பின்னர் என் மூலமாக நூற்றுக்கணக்கானோர் பைஅத் செய்துள்ளனர் என்கின்றனர். இன்னும் கணிசமான சம்பவங்கள் உள்ளன. வருங்காலத்தில் இன்ஷா அல்லாஹ் கூறுவேன். அல்லாஹ் இந்த சஹாபாக்களின் தகுதியை உயர்த்துவானாக. அவர்கள் மூலமாக அநேக மக்களுக்கு அல்லாஹ் காலத்தின் இமாமின் தூதுச் செய்தியை எடுத்து வைத்தான். பிறகு அவர்கள் அதனை மேற்கொண்டு அந்த தூதுச் செய்தியைக் கொண்டு சென்றனர். இன்று அவர்களின் சந்ததிகள் அவர்களது உழைப்பு தக்வா ஆகியவற்றின் பலனை அனுபவிக்கின்றனர். எனவே அந்த பெரியவர்களுக்காக துஆ செய்யுங்கள். அவர்களின் சந்ததிகளிடம் அவர்களிடமிருந்து அஹ்மதிய்யத் வந்தது. அந்த சஹாபாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் இருந்தனர். அவர்களுக்கு மிக அதிகமாக நன்றி தெரிவிக்க வேண்டும். நன்றி தெரிவித்தலின் தத்துவமாவது அவர்களுக்காக துஆ செய்ய வேண்டும். அதே வேளையில் தமது தொடர்பையும் ஜமாஅத்துடன் உறுதியாக்க வேண்டும். இந்த தூதுச் செய்தியை மென்மேலும் கொண்டு செல்லுங்கள். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை நம் அனைவருக்கும் தந்தருள்வானாக.

இன்றும் கூட ஒரு கவலைக்குரிய செய்தி கிடைத்துள்ளது. நமது ஒரு சகோதரரை நவாப்ஷாவில் ஷஹீதாக்கியுள்ளனர். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அவர் பெயர் மக்சூத் அஹ்மத் சாஹிப். இவர் இத்ரீஸ் சாஹிபின் மகன் ஆவார். முதலில் தக்ருண்டியில் இருந்தார். சிறிது காலத்திற்கு முன் 15 - 20 வருடங்களாக ரப்வாவில் வாழ்ந்து வந்தார். மக்சூத் சாஹிபுடைய குடும்பம் காதியானுக்கு அருகிலுள்ள பட்டியான்கோத்தைச் சேர்ந்தது. இவரது குடும்பத்தில் இவரது பாட்டனார் மவ்லவி அப்துல் ஹக் நூர் சாஹிபுடைய பைஅத் மூலம் அஹ்மதிய்யத் வந்தது. 1934ல் அவர் பைஅத் செய்தார். இவரது பாட்டனாருக்கு நிர்வாகத்தில் நல்ல அனுபவம் இருந்தது. எனவே இரண்டாவது மஸீஹ் (ரலி) அவர்கள் சிந்து பகுதியிலுள்ள நிலத்தை ஆரம்பத்தில் இவரது நிர்வாகத்தில் தந்திருந்தார்கள். நாஸிராபாத், மஹ்மூதாபாத், மற்ற மாநிலத்திலும் கண்காணிப்பாளராக இருந்தார். இவரது பாட்டனார் பிறகு 1942 -ல் ஜமாஅத்திற்கு மாநிலத்திலிருந்து தமது நிலத்தை திருப்பி வாங்க வேண்டியதிருந்தது.

21 டிசம்பர் 1966 -ல் இவரது பாட்டனார் அப்துல் ஹக் நூர் சாஹிபையும் ஷஹீதாக்கி விட்டார்கள். அப்போது மக்சூது சாஹிபின் வயது 12 ஆக இருந்தது. இவர் தமது பாட்டனாரின் ஷஹாதத்தைக் கண்ணால் கண்ட சாட்சியாவார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் பழைய ஷஹீதுகளைக் குறிப்பிட்டு குத்பா கொடுக்கும் போது ஷஹாதத்துகளின் லிஸ்டில் ஜுன் 1999ல் இவரது பாட்டனாரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். 1983 வரை மக்சூது சாஹிப் குருண்டியில் இருந்தார்கள். பிறகு ரப்வாவுக்கு மாற்றலானார்கள். 15 வருடமல்ல. 26-27 வருடமாக அங்கு இருந்தார்கள். ரப்வாவுக்குச் சென்றதும் ராஜா நஸீர் சாஹிபுடைய ஒரு கம்பெனியில் வேலை பார்த்தார். அவரது பொறுப்பில் சிந்து பகுதியின் சேல்ஸ்மேன் ஆக சென்று வருவார். ஒவ்வொரு மாதமும் செல்வார். மருந்துகளை விற்பதற்கும் ஆர்டர் எடுக்கவும் செல்வார்.

கூறுகிறார்: கடந்த 27 பிப்ரவரியிலிருந்து சுற்றுப் பயணத்தில் இருந்தார். ஷஹாதத் ஆன நாளான 7 மார்ச் 2012 அன்று சுமார் பதினோரு மணிக்கு நவாப்ஷா வந்தார். அங்கு மாலை 3.00 மணிக்கு நவாப்ஷாவின் பிரபல பஸாரான மோனி பஸாரில் அடையாளம் தெரியாத சிலர் இரண்டு மோட்டார் பைக்கில் வந்து நின்று இவரை மறித்தனர். இவர் மீது சுட்டார்கள். அதனால் இவருக்கு ஷஹாதத் ஏற்பட்டது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். காவல்துறையினர் சடலத்தை எடுத்துச் சென்றனர். போஸ்ட்மார்டம் செய்தது. நாம் அறிந்திருப்பது போன்று இந்த பத்து நாட்களில் நவாப்ஷாவில் இது இரண்டாவது ஷஹாதத் ஆகும். மர்ஹூம் மூஸியாக இருந்தார்.

ஷஹாதத் மர்ஹூமின் மனைவி கூறுகின்றார்: மர்ஹூம் இரண்டு நாட்களுக்கு முன்பு தமக்கு மிரட்டல்கள் வருவதாக கூறினார். மேலும் ஒரு இந்து டாக்டர் உடைய கடைக்கு மருந்து சப்ளை செய்யச் சென்ற போது அக்கொடியவர்கள் அந்த இந்து டாக்டரையும் மிரட்டினர். இனி இந்த மிர்ஸாயி உமது கடைக்கு வந்தால் உம்மையும் அந்த மிர்ஸாயியையும் கொல்வோம் என்று மிரட்டினர். பிறகு இவரது மனைவி கூறுகிறார். மர்ஹூம் நல்லொழுக்கம் உள்ளவர். தொழுகையில் பேணுதலும் முறையாக நஃபில் தொழுவரும், ஜமாஅத்துடன் தொழுபவரும் பொருள் தியாகத்தில் ஆர்வத்துடன் பங்கெடுப்பவரும் ஆவார். தமது மனைவியின் சந்தாவையும் இவ்வருடம் தானே கொடுத்து விட்டார். சுற்றுப்பயணம் செல்லும் முன் தமது சந்தாவை முழுமைப்படுத்தி விட்டே சென்றார்.

இறைவன் பக்கம் அழைக்கும் ஆர்வத்தை தமது பாட்டனாரிடமிருந்து வாரிசாகப் பெற்றிருந்தார். பயணத்தின் போது ஜமாஅத் நூல்களை கையில் வைத்திருப்பார். விநியோகம் செய்வார். செயலாக்கமுள்ள தப்லீக் செய்து வந்தார். இந்த தப்லீகின் காரணத்தால் நிச்சயமாக அவருக்கு எதிர்ப்பு உருவாகி இருக்கலாம். சில நாட்கள் சென்றாலும் பஸாரில் அவரது அறிமுகம் இவர் அஹ்மதி என்ற அடிப்படையில் இருந்தது. அறிமுகமானதும் மக்களுக்கு நூல்களை வழங்கி விடுவார். மிகவும் இனிய சுபாவம் உடையவர். அன்பு காட்டுபவர். தூய்மையை விரும்புபவர். படைப்பின சேவைகளில் ஆர்வத்துடன் பங்கெடுப்பார். தேவையுள்ளவர்களுக்கு இலவசமாக மருந்துகள் கொடுப்பார். கிலாஃபத்துடன் அளவற்ற நேசம் உடையவர். அதுபோன்று திருக்குர்ஆனுடனும் சிறப்பான நேசம் இருந்தது.

இவரது மனைவி மேலும் கூறுகிறார். ஒருமுறை நான் மக்சூத் அஹ்மத் சாஹிபிடம் சொன்னேன். நாமும் உயிர்தியாகிகளின் குடும்பத்தில் இணைய முடியுமா? அப்போது அவர்கள், ஏன் முடியாது? இறைவன் தேர்ந்தெடுத்தால் நாமும் அதில் சேர முடியும் என்று பதிலளித்தார். அவரது மனைவி ரஷீத் ஸவ்கத் சாஹிபா உடன் மூன்று மகன்கள் 2 மகள்கள் உள்ளனர். மகன் இங்கு மான்செஸ்டரில் இருக்கிறார். திருமாணமாகாதவர். மகள் ஒன்று திருமணமாகி அமெரிக்காவில் உள்ளார். இன்னொருவர் ரப்வாவில் ஆசிரியராக உள்ளார். அல்லாஹ் மர்ஹூம் உடைய தகுதியை உயர்த்துவானாக. உறவினர்களுக்கு பொறுமையை வழங்குவானாக. எதிரிகளைப் பிடிக்க விரைவாக ஏற்பாடு செய்வானாக.

இரண்டாவது ஜனாஸா ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு தொழுவேன். அவர் ஹாஜிரா பேகம் சாஹிபா மேஸ்திரி முஹம்மது ஹுஸைன் சாஹிப் தர்வேஷ் காதியானின் மனைவி ஆவார். இவர் மார்ச் 4 -5 தேதிகளின் மத்திய இரவில் 79வது வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் முன்ஷி அப்துர் ரஹீம் சாஹிப் ஃபானி அம்ருஹாவின் மகள் ஆவார். 1950ல் காதியானில் தங்குவதற்காக ஹிஜ்ரத் செய்து காதியான் வந்தவர். மர்ஹூமாவுக்கு 1951 ல் திருமணம் நடந்தது. கணவருடன் சேர்ந்து எளிய வாழ்க்கை வாழ்ந்தார். பெரிய குடும்பமாக இருந்தாலும் 5 பையன்கள் 5 பெண்கள் ஆக 10 குழந்தைகள் இவருக்கு உள்ளனர். அவர்களை நல்ல முறையில் கவனித்து வந்தார். தர்பிய்யத் வழங்கினார். பிள்ளைகள் அனைவரும் திருமணமாகி விட்டனர். மர்ஹூமா மூஸி ஆவார். காதியான் பெஹஸ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டார். அல்லாஹ் மர்ஹூமாவுக்கு மக்ஃபிரத் வழங்குவானாக. தகுதிகளை உயர்த்துவானாக. தனது திருப்தியின் ஜன்னத்தில் உயர் தகுதியை வழங்குவானாக. இவரது உறவினர்களுக்கு அழகிய பொறுமையினை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 09.03.2012**

Translated by : Muallim M. NIZAMUDEEN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456